2022 ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

செலவினத் தலைப்பு 110 மற்றும் 228

உள்ளடக்கம்

		பக்கம்
அத்தியாயம் 01–	நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு	05
அத்தியாயம் 02 –	முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	12
அத்தியாயம் 03 –	வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	40
அத்தியாயம் 04 –	செயலாற்றுகை சுட்டிகள்	97
அத்தியாயம் 05–	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* அடையும் செயலாற்றுகை	99
அத்தியாயம் 06 –	மனித வள விபரம்	106
அத்தியாயம் 07–	இணக்க அறிக்கை	111

அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1. அறிமுகம்

நாட்டின் சட்டத்துறை மற்றும் நீதிமன்றத் துறையின் பொறுப்புக்களை வகிக்கும் பல திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களைக் கொண்டு இவ்வமைச்சு தாபிக்கப்பட்டுள்ளது. அதன்படி காலத்துக்குக் காலம் அமைச்சின் விடயப் பொருளில் மாற்றம் ஏற்பட்டாலும் சட்ட மறுசீரமைப்பிலும், பொதுமக்களின் நீதி நிருவாக பொறிமுறைக்காக வசதிகளை ஏற்படுத்துவதிலும் முன்னேறு நிறுவனமாக இவ்வமைச்சு, ஆரம்பம் முதல் இதுவரை தொழிற்படுகிறது. குறிப்பாக இவ்வமைச்சின் விசேடித்த தன்மையாவது 110 மற்றும் 228 ஆக இரு செலவின தலைப்புக்களின் பொறுப்பு பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு உரித்தாக்கப்பட்டிருப்பதே ஆகும்.
குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு மற்றும் பிரசைகளின் குடியியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உதவுகின்ற பிரதான சட்டங்கள் உள்ளிட்ட முக்கியமான பல சட்டங்களின் பொறுப்பு இவ்வமைச்சின் விடயப் பொருளைச் சேர்ந்துள்ளது. அதன்படி அச்சட்டங்களை காலத்திற்கேற்றவாறு மற்றும் சமுதாய தேவைப்பாடுகளின்படி திருத்தஞ் செய்வதும், புதிய சட்டங்களை அறிமுகம் செய்வதும் இவ்வமைச்சினால் செய்யப்படுகிறது. இதற்கு மேலதிகமாக இவ்வமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பிற நிறுவனங்களுக்குரிய விடயப்பொருள்களின் சட்டங்களைத் திருத்தஞ் செய்வதற்காக பாரியதொரு செயற்பாடு மூலம் சட்டவாக்கச் சான்றிதழ் மற்றும் அறிவுரைகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் சட்டவரைஞர் திணைக்களத்தின் மூலம் வரைவுகளை தயார் செய்து கொடுத்தல் என்பன செய்யப்படுகிறது.

நீதி நிருவாகத்திற்கான வசதிகளை வழங்குதலும் நீதிமன்றத்தின் சுயாதீனத்தை பாதுகாப்பதும் அமைச்சின் தலையாய பொறுப்பாகும். நீதிமன்ற நிருவாகத்திற்காக அமைச்சினால் எப்பொழுதும் பூரண ஒத்துழைப்பு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படுகிறது. வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள 34 நீதிமன்ற வலயங்களில் உள்ள 225 நீதிமன்றங்கள் மற்றும் 39 தொழில் நியாய சபைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் பணிகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி நீதிமன்றக் கட்டடங்களின் பேணல், நவீனமயப்படுத்தல் மற்றும் தேவைக்கேற்ப புதிய கட்டடங்களை நிர்மாணித்தல் ஆகிய பணிகளும் செய்யப்படுகின்றன. அத்துடன் நீதிபதிகளுக்கு சுயாதீனமாக மற்றும் மதிப்புடன் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்காக தகுதியான வதிவிட வசதிகளை வழங்குதல், நீதிபதிகளின் அலுவலக வாசஸ்தலங்களை நிர்மாணித்தல் மற்றும் பேணுதல் பணிகளும் செய்யப்படுகின்றன. அத்துடன் அவர்களினது தொலைத்தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை உரியவாறு வழங்கும் பணியும் அமைச்சினால் செய்யப்படுகிறது.

நீதிமன்ற முறைமையினுள் நீதி நிருவாகத்தின் தாமதங்களைத் தவிர்த்துக்கொள்ளல் இவ்வமைச்சின் பிரதான பொறுப்பொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. அதன்படி நீதிமன்றங்களில் குவிகின்ற வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதற்காக மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, கடன் இணக்க சபைத் திணைக்களம் மற்றும் சர்வதேச நடுத்தீர்ப்பு மையம் போன்ற மாற்றுவழி பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறிமுறைகள் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றன. அத்துடன் அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் நிபுணத்துவ விஞ்ஞான சான்றுகளை வழங்குதல் நீதி நிருவாகத்தை துரிதப்படுத்துவதற்கு மிகவும் முக்கியமாகிறது.

அத்துடன் சட்டத்தின் உதவியை நாட முடியாதுள்ள மக்களுக்காக சட்ட உதவி ஆணைக்குழுவினால் அனைத்து பிரசைகளுக்கும் நீதியை அணுகுவதற்கான சமமான வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக பாரியதொரு பணி நிறைவேற்றப்படுகிறது. குற்றவாளிகளை தவறாளர்களாக்குவதற்காக நீதிமன்றங்களில் சாட்சியங்களை அளிப்பதற்கு சாட்சிகளை ஊக்குவிப்பதற்கு குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்காக தேசிய அதிகார சபை செயல்படுகிறது. அத்துடன் சமாதான நீதிவான்கள், திடீர் மரண விசாரணையாளர்கள், சத்தியப் பிரமாண ஆணையாளர்கள், மற்றும் சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களை நியமிக்கும் மற்றும் நிர்வகிக்கும் அலுவல்களும் இவ்வமைச்சின் மூலம் செய்யப்படுகின்றன.

1.2. நிறுவனத்தின் தூரநோக்கு ,பணிக்கூற்று,குறிக்கோள்கள்

நோக்கு

பொது மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நீதி அமைப்பு – நியாயமான மற்றும் சுபீட்சமுள்ள இலங்கை

இலக்கு

மக்களை முன்னிலைப்படுத்தி வினைத்திறனான நீதிமன்ற நிர்வாகத்தின் மூலம் இலங்கை மக்களுக்கு ஸ்திரத் தன்மையுள்ள, நியாயமான மற்றும் சுதந்திரமான சூழலை உருவாக்குதல் :

- பயனுள்ள மற்றும் காலத்துக்கேற்ற சட்ட சீர்திருத்தம்,
- கொள்கை அபிவிருத்தியை முன்னெடுத்தல்.
- சர்வதேச அமைப்புக்களுடன் ஆதரவாக செயலாற்றுதல் மற்றும் இணைதல் மற்றும்
- சமூக சட்ட சேவைகள்

மதிப்பு


- தொடர்ச்சி
- நம்பிக்கை
- உள்ளடக்குதல்
- வெளிப்படைத் தன்மை
- பொறுப்புக் கூறல்.

நோக்கம்

- நீதி நிலைநாட்டும் பொறிமுறையை வலுப்படுத்தல் .
- சட்ட மறுசீரமைப்பை மேம்படுத்தல் மற்றும் சட்டங்களை இயற்றுதல் .
- சட்ட அதிகாரத்தை மேம்படுத்தல் மற்றும் அனைவருக்கும் நீதி அணுகலுக்கான சம வாய்ப்புக்களைப் பாதுகாத்தல் .
- நீதிமன்றங்கள் தமது பணிகளை வினைத்திறனாக மேற்கொண்டு செல்வதற்கேற்ற சாதகமான சூழலை உருவாக்குதல் .
- பொது மக்களுக்கு விரைவான மற்றும் மிகச் சிறந்த சேவையை வழங்குவதை முக்கிய நோக்காகக் கொண்டு நீதிமன்றங்களில் வழக்கு விசாரணை செய்தல் மற்றும் தீர்ப்பளித்தல் போன்றவற்றில் நிலவும் தாமதங்களுக்கு தீர்வு காணுதல் .
- பயிற்சிகளின் மூலம் நீதித் துறைச் சேவையின் வினைத்திறனையும்தரத்தையும் , .மேம்படுத்துதல்

- மாற்று பிணக்கு தீர்ப்பு முறைமையை வலுப்படுத்துதல் .
- குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் மற்றும் உரித்தைத் தயாரித்தல்அமுல்படுத்தல் மற்றும் அவ்வாறான ,உறுதிப்படுத்தல் , அமுல்படுத்தல் ,பாதுகாத்தல் ,உரித்துக்களையும் மேம்படுத்தல் ,உரிமைகளையும் .மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்றவற்றுக்கான பொறிமுறையை வகுத்தல்
- சகல இலங்கையர்க்கும் நீதிக்கான அணுகலில் கிட்ட வேண்டிய சம வாய்ப்புக்களை வழங்குவதற்கு அவர்களின் பொருளாதார அல்லது பாலினம் சாதி சமூக நிலை, தேசியம் அல்லது ஊன நிலை போன்ற பாகுபாடின்றி நீதியைப் பெறுவதற்கான சம .வாய்ப்புக்களை வழங்கும் சமூகத்தை உருவாக்குதல்
- சமூகத்தில் நல்லிணக்கத்தையும் .சகவாழ்வையும் அடைதல் ,
- சிறைச்சாலைகளின் நெரிசலைக் குறைத்தல் .
- நீதி அமைச்சின் விடயப் பரப்பினுள் அடங்கும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் வினைத்திறனையும்.தரத்தையும் மேம்படுத்தல் ,

1.4. நிறுவன விளக்கப்படம்



..

1.5. இந்த அமைச்சின் செயலாளர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராகும் திணைக்களங்கள்.

01. சட்டமா அதிபர் திணைக்களம்
02. சட்ட வரைஞர் திணைக்களம்
03. இலங்கை சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்
04. அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம்
05. கடன் இணக்க சபைத் திணைக்களம்
06. உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்
07. சிறைச்சாலைகள் திணைக்களம்
08. சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்

1.6 ஏனைய நிறுவனங்கள்

செலவினத் தலைப்பு (110)

01. மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு
02. நீதித் துறையல்லாத அலுவலர்களின் பயிற்சி நிறுவனம்
03. இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு
04. இலங்கை நீதிபதிகளின் நிறுவனம்
05. குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகார சபை
06. தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம்
07. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
08. இழப்பீடு அலுவலகம்
09. காதி மேன்முறையீட்டுச் சபை மற்றும் காதி நீதிமன்றங்கள்
10. புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் அலுவலகம்

செலவினத் தலைப்பு (228)

01. தொழில் நியாய சபைச் செயலகம்
02. மீயுயர் நீதிமன்றத் தொகுதி முகாமைச் சபை

* **சட்டக் கல்லூரி**

சட்டக் கல்லூரியும் இவ்வமைச்சின் கீழ் வர்த்தமானிப்படுத்தப்பட்டுள்ளது எனினும் அதற்காக 110 அல்லது 228 செலவின தலைப்புக்களின் கீழ் ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்படுவதில்லை.

1.7. பிரதான செயற்திட்டங்களின் தகவல்கள்


செயற்திட்டங்களின் பெயர்	பங்களிப்புச் செய்யும் முகவர் நிறுவனம்	செயற்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவினம்	செயற்திட்டத்தின் கால எல்லை
வினைத்திறனான மற்றும் பயனுள்ள நீதித் திட்டம் .(Efficient and Effective Justice Project)	USAID	US$ 15Mn	5 years 2022-2026
சமூக நல்லிணக்கம் மற்றும் ஒப்புரவு செயற்திட்டம்)Social cohesion and Reconciliation Project(	USAID	US$ 19Mn	5 Years 2018-2023
நீதித் துறைக்கு பங்களிப்பு வழங்குதல் .(Support to Justice Sector)	EU	EUR 18 MN(EU) & EUR 1Mn (UN)UNDP:11m Euros UNICEF:6m Euros	4.5 Years 2022-2026
இலங்கையின் சமூக சகவாழ்வு மற்றும் சமாதானத்தை வலுப்படுத்தல்.)Strengthening social Cohesion and peace in Sri Lanka(	EU	EUR 11Mn (8Mn EU,3Mn AA)	3 Years 2022-2025
பயனுள்ளவாறு பிணக்குகளைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்த சபை ஆணைக்குழுவுக்கு ஆதரவு அளித்தல் .(Supporting Effective Dispute Resolution (SEDR)Mediation Board Commission (Comes under STRIDE Project)(	EU	EUR 7Mn	2020-2024
இலங்கை குற்றவியல் நீதி அமைப்பின் தடயவியல் மருத்துவ பகுப்பாய்வுத் திறனை வலுப்படுத்துதல் (Strengthen Capacity Building of Forensic Drug Analysis in the Criminal Justice System in SL)	KOICA	US$ 4MN	4 Years 2021-2024
இலங்கையினுள் நீதிக்கான நியாயமான அணுகலை வலுப்படுத்தல். (Strengthening Equitable Access to Justice in Sri Lanka)	JICA	JPY 60MN	In pipeline
யாழ் மாவட்டத்தில் 2889 மழை நீர் சேகரிப்புத் தொட்டிகளை நிர்மாணித்தல். (Construction of 2889 Rain Water Harvesting Tanks in Jaffna District)	Indian High Commission	SLR 299,011,991	Signed for 3 years (2017) extend-2024
இலங்கையின் நீதி அமைப்பின் தொலைதூர செயற்பாட்டை மேம்படுத்தல்: கட்புல வழக்கு விசாரணை மற்றும் நடமாடும் நீதிமன்றங்கள். (Promoting the Remote Functioning of the Justice	UNODC commission U.S. Department of State	US$ 520,000	2020-2022

System in Sri Lanka: Virtual Trials and Mobile Courts)	Bureau of International Narcotics and Law Enforcement Affairs(INL)		
உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான செயற்திட்டங்கள் (Infrastructural Projects)	ICRC International Committee of the Red Cross	Intervention	
வர்த்தக சட்ட முதலீடு மற்றும் ஒப்பந்த அமுலாக்கத்தின் மீது கவனத்தைச் செலுத்தி நீதிப் பிரிவின் வினைத்திறனை வலுப்படுத்தல். (Strengthening the Efficiency of the Justice Sector with a Focus on Commercial Law Investment and contract enforcement)	ADB- Asia Development Bank	Technical Assistant	

02. அத்தியாயம் - முன்னேற்றமும் - எதிர்கால நோக்கும்


விசேட, சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

நீதித் துறை அமைப்பில் நிலவும் தாமதங்களை தவிர்க்கும் வகையில் நிறைவேற்று அதிகாரத்தைச் செலுத்தும் பொறுப்புக்கள் இந்த அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து சிறப்பாக நீதி நிர்வாகத்தை மேற் கொள்வதற்குத் தேவையான சட்ட மறுசீரமைப்பு, உட்கட்டமைப்பு மற்றும் பிற வசதிகளை வழங்குதல் உள்ளிட்ட சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குகிறது. நீதிமன்றங்களில் குவிந்துள்ள வழக்குகளை விரைவாகத் தீர்ப்பதே தற்போது நீதித் துறை முகம் கொடுத்துள்ள முக்கிய சவாலாக அமைகிறது. 2022.12.31ஆம் திகதிக்கு 1,127,265 எண்ணிக்கையான வழக்குகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளதுடன், அந்த எண்ணிக்கை பின்வருமாறு நீதிமன்றங்களில் வியாபித்துள்ளது.




கடந்த காலம் முழுவதும் நீதிமன்றங்களில் வழக்குகள் படிப்படியாக குவியும் போக்கைக் காட்டுகிறது. எனினும் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் தொடுக்கப்படும் வழக்குகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவடைந்து செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்துடன் நிறைவு செய்த வழக்குகளின் எண்ணிக்கையும் படிப்படியாக குறைவடைந்து செல்கிறது. நிலவிய கோவிட் தொற்றுப் பரவல் நிலை மற்றும் பொருளாதார நெருக்கடி போன்றவற்றால் ஏற்பட்ட ஸ்திரமின்மை காரணமாக நாட்டினுள் பொறிமுறைகள் முறையாக செயற்படாமையும் இதற்கான காரணமாக அமைகிறது.


தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை



நிறைவு செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை



தீர்க்கப்படவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை




நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்கியுள்ளதால் வழக்கை நிறைவு செய்வதற்கு எடுக்கும் காலமும் மென்மேலும் நீடித்துச் செல்கிறது. குறிப்பாக மக்கள் தொகையில் ஒரு மில்லியனுக்கான நீதிபதிகளின் எண்ணிக்கை குறைந்த பெறுமதியை எடுப்பதுடன் அது 2020 ஆம் ஆண்டு 15 ஆக ஆவதுடன் தற்போது 18 ஆக உயர்ந்துள்ளது.

நீதிமன்றங்கள்	நீதிமன்றங்களின் எண்ணிக்கை	நீதிமன்றக் கூடங்கள்	தீர்க்கப்பட வேண்டியுள்ள வழக்குகளின் எண்ணிக்கை (2022.12.31)	நீதிபதிகளின் எண்ணிக்கை (2022.12.31)	ஒரு நீதிபதிக்கு உள்ள வழக்குகளின் எண்ணிக்கை
உயர் நீதிமன்றம்	01	04	5,482	17	322
மேன்முறையீட்டு நீதிமன்றம்	01	10	3,423	20	171
குடியியல் (சிவில்) மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்கள்	22	22	6,800	92	488
வர்த்தக மேல் நீதிமன்றம்	01	04	8,378		
விசேட மேல் நீதிமன்றங்கள்	01	02	03		
மேல் நீதிமன்றங்கள் (குற்றவியல்)	34	48	29,723		
மாவட்ட நீதிமன்றங்கள்	33	61	263,481	241	4,432
மாவட்ட நீதவான் நீதிமன்றங்கள் ஒரு நீதிபதி உள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகள்	52	79	-		
நீதவான் நீதிமன்றங்கள்	53	78	803,642		
சுற்றுலாத் துறை நீதவான் நீதிமன்றங்கள்	25	25	-		
சிறுவர்களுக்கான நீதவான் நீதிமன்றங்கள்	02	01	1,108		
தொழில் நியாய சபைகள்	39	39	5,225	29	180
மொத்தம்	**264**	**373**	**1,127,265**	**399**	

சட்ட சேவைகளை வழங்கும் அமைப்புக்களும் அபராதப் பணம் உள்ளிட்ட பெறுகைகளின் ஊடாக பெருமளவு வருமானம் ஈட்டுவது குறிப்பிடத்தக்கது. 2016 வருடம் முதல் திரட்டப்பட்ட வருமானம் கீழ்காட்டப்பட்டுள்ளது.

நீதிமன்றங்களால் திரட்டப்பட்ட வருமானம்



சட்டத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்டும் பொருட்டு நீதி அமைப்பை வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்துவதற்கு பல செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சட்ட மறுசீரமைப்பு

நீதி அமைச்சின் வரலாற்றில் முதன்முறையாக 2022 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 31 சட்டத் திருத்தங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சட்ட சீர்திருத்தங்கள் சம காலத் தேவைகளுக்கு ஏற்ப சட்டம், சட்ட அல்லது சமூக அமைப்பு அல்லது நிறுவனங்களின் மாற்றங்களை மேம்படுத்தல் மற்றும் உட்சேர்த்தல் போன்றவற்றை உள்ளடக்கியது. அதற்கமைய இந்த சட்ட சீர்திருத்தங்கள் பின்வருமாறு அமையும்.

அ. புதிய குற்றங்களை அறிமுகப்படுத்தல்.

ஆ. குற்றங்கள் உள்ளிட்ட தற்போதுள்ள சட்டத்தை நீக்குதல்.

இ. சிறப்பு கைத்தொழில், பரிவர்த்தனை முறைமைகள் ஒழுங்குபடுத்தல்.

ஈ. வழக்கில் உள்ள சட்டத்தின் இடைவெளிகளையும், குறைபாடுகளையும் நிவர்த்தி செய்தல்.

உ. ஏற்படும் சூழ்நிலைக்கு அமைவாக தற்காலிக ஏற்பாடுகளை வகுத்தல்.

காலத்தின் தேவைக்கேற்ப பல சட்ட சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அரசியலமைப்புச் சட்டத்தின் பத்தொன்பதாம் திருத்தம் முதல் இருபத்தியொராவது திருத்தம் வரை

பத்தொன்பதாம் திருத்தத்தின் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்கள் வலுப்படுத்தப்பட்டதுடன், இருபதாம் அரசியலமைப்பு திருத்தம் சிற்சில முற்போக்கான ஏற்பாடுகளை ஓரளவு நீக்கியதுடன், இருபத்தியொராம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மீண்டும் சுயாதீன ஆணைக்குழுக்கள் வலுவூட்டப்பட்டன.

2003ஆம் ஆண்டு 21ஆம் இலக்கத்தைக் கொண்ட மத்தியஸ்தம் (விசேட பிணக்குகளின் வகைப்பாடு)

இலங்கையினுள் மத்தியஸ்தம் உயர் சதவீதத்தை எடுப்பதுடன், அந்த உத்தரவு அனைத்து நிர்வாக மாவட்டங்களுக்கும் காணிப் பிணக்குகள் மத்தியஸ்தத்தை அறிமுகப்படுத்தியது.

2015ஆம் ஆண்டு 04 இலக்கத்தைக் கொண்ட குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களையும், சாட்சிகளையும் பாதுகாக்கும் மற்றும் நிவாரணம் வழங்கும் சட்டம்.

குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோரின் உரிமைகளையும், உடமைகளையும் பாதுகாப்பதற்கு மிகவும் சிறந்த மாதிரி ஒன்றை 2015 ஆண்டு இந்த சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தபட்டது. அதில் உள்ள சிற்சில குறைகளை நீக்குவதற்கு சட்ட ஏற்பாடுகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளன.

குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக் கோவையில் மேற் கொள்ளப்பட்ட திருத்தங்கள்.

2022ஆம் ஆண்டு 02ஆம் இலக்க திருத்தம்.

வழக்கு விசாரணைகளை விரைவுபடுத்துவதற்காக மேல் நீதிமன்றத்துக்கு முன் விளக்க மாநாட்டு நடவடிக்கை முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

2022ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க திருத்தம்

குறித்த வழக்கின் முறைப்பாட்டாளர் மற்றும் அனைத்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கும் வழக்குத் தீர்ப்பின் அல்லது இறுதி உத்தரவின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை கட்டணம் இன்றி வழங்குதல்.

2022ஆம் ஆண்டு 38 ஆம் இலக்கத் திருத்தம்

எவரேனும் ஒருவர் குற்றம் இழைக்கும் சந்தர்ப்பத்தில் 18 வயதிலும் குறைந்தவர் என நீதிமன்றக் கருதுமேயாயின், அவருக்கு மரண தட்டணை விதிக்காமை.

குடியியல் நடவடிக்கை முறை சட்டக் கோவையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்

2022ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க திருத்தம்

தோற்றத் தவறுகையின் மேல் பதியப்பட்ட வழக்குத் தீர்ப்புக்களை தள்ளி வைக்கின்ற அல்லது தள்ளி வைக்க மறுக்கின்ற கட்டளையுடன் அதற்கு அடிப்படையான ஏதுக்களை குறித்துரைத்தல்.

2022ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க திருத்தம்

இறுதி விருப்பாவணச் சட்டத்தை மேம்படுத்துவதற்கான ஒதுக்கீடுகளை அறிமுகம் செய்தல்.

2022 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம்.

தரவுப் பாதுகாப்புக்கான சட்ட ஒதுக்கீடுகளை அறிமுகம் செய்தல்.

2022 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க சிறு கோரிக்கை நீதிமன்றங்களின் நடவடிக்கை முறை சட்டம்.

1.5 மில்லியன் ரூபாவுக்கு குறைந்த மதிப்புள்ள பிணக்குகளை கால வரம்புகளுடன் நிறைவு செய்வதற்கு சிறப்பு நடைமுறையையும், நீதிமன்றத்தையும் அறிமுகம் செய்தல்.

நீதித் துறைச் சட்டத்தில் மேற்கொள்ளும் திருத்தங்கள்.

2022 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க

மேல் நீதிமன்ற முன் விளக்க மாநாட்டு கட்டளைக்காக பதியப்பட்ட நீதிபதி ஒருவரை நியமித்தல்.

2022 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க

விசேட சிறு கோரிக்கை நீதிமன்றங்களுக்கான ஒதுக்கீடுகளை வகுத்தல்.

2022 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் (திருத்தச்) சட்டம்.

பணியாளர்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கான ஒதுக்கீடுகளை அறிமுகம் செய்தல்.

2022 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் (திருத்தச்) சட்டம்.

இந்தச் சட்டத்தில் பிணக்குகளுக்காக முன்நிற்கும் போது தரப்பினர்களுக்கு சட்டத்தரணியூடாக பிரதிநிதிப்படுத்துவதற்கான ஒதுக்கீடுகளை வகுத்தல்.

2022 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க அற்றோனித் தத்துவ (திருத்தச்) சட்டம்.

அற்றோனி அதிகாரத்தைப் பதிவு செய்வதைக் கட்டாயப்படுத்தல். அற்றோனி அதிகாரம் இரத்தாகும் கால எல்லை நிச்சயிக்கப்பட்டுள்ளதுடன், அதனை இரத்து செய்தல் மற்றும் மீண்டும் நிறுவுதல் போன்றவற்றுக்கான நடைமுறைகளை அறிமுகப்படுத்தல்.

2022 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்க இறுதி விருப்பாவண (திருத்தச்) சட்டம்.

மோசடிகளைத் தடுத்தல் மற்றும் சொத்துக்கள் என்பதற்கு கூட்டாட்சியாதனம் மற்றும் ஏதேனும் காணி சிறுகூறு என்பதை உட்சேர்த்தல்.

2022 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க மோசடித் தடுப்பு (திருத்தச்) சட்டம்.

நொதாரிஸ் ஒருவர் இன்றி 5 சாட்சிகளின் முன்னிலையில் இறுதி விருப்பாவணத்தை எழுதிக் கையொப்பமிடுதல் இதன் மூலம் இரத்து செய்யப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க நொதாரிசு (திருத்தச்) சட்டம்.

ஆவணத்தில் கையொப்பம் இடும் அனைத்துத் தரப்பினரும் கைவிரல் அடையாளம் இடுதல் உள்ளிட்ட மோசடிகள் தடுப்பு ஒதுக்கீடுகளை அறிமுகப்படுத்தல்.

2022 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஆவணங்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டம்.

கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்கான தடை எச்சரிக்கையாளரை மட்டுப்படுத்தல் மற்றும் அதற்குரிய ஒதுக்கீடுகளை உட்சேர்த்தல்.

2022 ஆம் ஆண்டு 37 ஆம் இலக்க கண்டிய விவாகம், மணநீக்கம் (திருத்தச்) சட்டம்.

திருமணத்துக்கான குறைந்த பட்ச வயது 18 ஆக இருத்தல் வேண்டும் எனவும், அதற்குரிய ஒதுக்கீடுகளை உட்சேர்த்தல்.

2022 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க நஞ்சு வகைகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடத வகைகள் (திருத்தச்) சட்டம்.

போதைப் பொருட்களுக்கு அடிமையாவதைத் தடுத்தல் மற்றும் புனர்வாழ்வு ஆகியவற்றுக்குரிய ஏற்பாடுகளை மேம்படுத்தல்.

2022 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க ஆளணியினருக்கு எதிரான கண்ணிவெடிகள் தடைச் சட்டம்.

இது தொடர்பான உடன்பாடுகளை அமுல்படுத்துவதற்குரிய ஒதுக்கீடுகளை வகுத்தல்.

2022 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் (திருத்தச்) சட்டம்.

சிறுவர்களின் உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் கல்வியை மேம்படுத்தல்.

2022 ஆம் ஆண்டு 40 ஆம் இலக்க அபாயகரமான வன விலங்குகள் (திருத்தச்) சட்டம்.

அபாயகரமான வன விலங்குகளை அழிப்பதற்கு ஏற்பாடுகளை உட்சேர்த்தல் உள்ளிட்ட திருத்தங்கள்.

2023 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க குத்தகை அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ள வளவுகளின் உடமைகளை மீளப் பெற்றுக் கொள்ளுதல். (சிறப்பு ஏற்பாட்டுச் சட்டம்)

ஒழுங்கான நடைமுறையின் கீழ் சாதாரண வாடகை மற்றும் குத்தகை நடவடிக்கைகளின் போது சட்ட தாமதங்களை தவிர்த்தல் மற்றும் மிகவும் குறுகிய காலத்தினுள் வாடகை வழங்குனருக்கு நிவாரணங்களை அளித்தல்.

2023 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க புனர்வாழ்வுப் பணியகச் சட்டம்.

புனர்வாழ்வு மற்றும் சிகிச்சை அளித்தல் போன்றவற்றுக்காக புனர்வாழ்வு பணியகத்தை தாபித்தல்.

2023 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தல் சட்டம்.

வாக்காளர்கள் வாக்களிக்கும் போது அழுத்தங்கள் இன்றி வாக்களிப்பதை உறுதிப்படுத்துவதற்கு ஏதாவதொரு கட்சிக்கு, வேட்பாளருக்கு அல்லது குழுவுக்கு வாக்காளர் வாக்களிக்கும் போது அழுத்தங்கள் இன்றி வாக்கு அளித்தல்.

இவற்றைத் தவிர, பல எண்ணிக்கையான சட்ட மறுசீரமைப்புக்களில் அமைச்சு தலையிட்டு விரைவாக அந்தச் சட்டத் திருத்தங்களை பாராளுமன்றத்துக்கு முன்வைத்து நிறைவேற்றவுள்ளது.

இந்த அமைச்சு உள்ளிட்ட ஏனைய அரச நிறுவனங்களிலும் சட்ட மறுசீரமைப்புக்களுக்கு சட்ட வரைவுத் திணைக்களம் அரும் பெரும் பணிகளை ஆற்றி வருகிறது. 2022 ஆம் ஆண்டில் 135 ஆரம்ப மற்றும் திருத்தச் சட்ட வரைவுகளும், 28 சட்டவாக்கம் செய்யும் தனி உறுப்பினர் சட்ட வரைவுகளும், 123 துணை சட்ட மீளாக்கங்களும், 11 மாகாண சபை பிரகடனங்களும் வரைவுகளை பூர்த்தி செய்து உரிய நிறுவனங்களிடம் கையளித்துள்ளது. இலங்கை நீதி ஆணைக்குழுவும் சட்டத் திருத்தங்கள் தொடர்பில் கற்றல்களை மேற்கொண்டு சட்ட திருத்தங்களை பரிந்துரைப்பதற்கு செயற்பட்டு வருகிறது.

நீதிபதிகள் எண்ணிக்கை மற்றும் நீதிமன்றங்களின் எண்ணிக்கை அதிகரித்தல்.

வினைத்திறன் மிக்க நீதித் துறையை உருவாக்கும் திட்ட அமுலாக்கத்துக்கு அமைய உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கையை 14 ஆல் அதிகரிக்கவும், 26 பேரை மேல் நீதிமன்ற நீதிபதிகளாக பதவி உயர்த்தவும், 46 பேரை சட்ட அலுவலகர்களாக ஆட்சேர்ப்பு செய்யவும் முடிந்தது. நாட்டினுள் நிலவிய பொருளாதார நிலை காரணமாக திட்டமிட்டபடி இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத போதிலும், 17 பேரை மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிப்பதற்கு மற்றும் நீதவான்கள் 30 பேரை நியமிப்பதற்காக ஒப்புதல் கிடைத்துள்ளது. தற்பொழுது மேல் நீதிமன்ற நீதிபதிகள் 4 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்குறித்த ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுடன் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 5 ஆல் அதிகரிப்பதற்கு, புதிய மேல் நீதிமன்றம், 4 மேலதிக மேல் நீதிமன்றங்கள், மேலதிக வர்த்தக மேல் நீதிமன்றம், 02 புதிய மாவட்ட நீதிமன்றங்கள், 02 மேலதிக நீதவான் நீதிமன்றங்கள் போன்றவற்றை தாபிக்க முடிந்தது. அத்துடன் 26 மாவட்ட நீதவான் நீதிமன்றங்களுக்கு மேலும் ஒரு நீதிபதி வீதம் நியமித்து சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளை தனித் தனியாக விசாரிக்க முடிந்துள்ளது.

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலும், அபிவிருத்திப் பணிகளும்.

நாட்டில் நிலவும் மோசமான பொருளாதார நிலை அமைச்சின் செயற்பாடுகளிடையே நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் துறையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது, இதன்படி, பொருளாதார நெருக்கடியைத் தணிக்கும் வகையில் வெளியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள் மற்றும் சுற்று நிருபங்களின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க, இந்த அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சகல அபிவிருத்தித் திட்டங்களும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அதற்கமைய பெரும்பாலான திட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன், தற்போது செயற்படுத்தப்படும் சில திட்டங்களினது நோக்கெல்லை பொருத்தமானவாறு மாற்றத்துக்கு உள்ளாக்கப்பட்டது.

இருப்பினும் 2022 ஆம் ஆண்டினுள் ரம்படகல்ல பொத்துவில், அக்கரைப்பற்று, நாரம்மல போன்ற நீதிமன்றங்களின் துணைக் கட்டிடங்களையும், நாவுல மற்றும் நாவலபிடிய நீதிபதிகளின் உத்தியோகபூர்வ இல்லங்களையும் நிர்மாணிக்க முடிந்தது. இரத்தினபுரி, வெலிமட, ஹெல்பொட போன்ற நீதிமன்ற கட்டிடங்களில் 80% வீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. காலி, தெல்தெணிய, பூகொடை, தெகியத்தகண்டிய, மொணராகலை, பகமூண, ஹிங்குரக்கொடை, வாகரை போன்ற நீதிமன்ற கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்டுள்ள செலவினத்தை அதிக பட்ச பயனைப் பெறக் கூடிய வகையில் கிடைத்த ஒதுக்கீட்டை முகாமைத்துவம் செய்து எஞ்சிய பணிகள் மேற் கொள்ளப்படும். நிகவெரடிய, புத்தளம், சம்மாந்துறை, மனம்பிடிய, குச்சவெளி, வாழைச்சேனை போன்ற இடங்களில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களிலும் அதிக சதவீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், விலைத் தளம்பல்களால் அதிக பட்ச கொடுப்பனவு மட்டுப்பாடுகள் தொடர்பில் சிக்கல்கள் எழுந்துள்ளது.

நீதிமன்றங்கள் தாபிக்கப்பட்டுள்ள காணிகளின் உறுதிப் பத்திரங்களில் சிக்கல்கள் நிலவுவதுடன், இதுவரை 83 காணிகளை முழுமையாக கையகப்படுத்தும் பணிகளை நிறைவு செய்துள்ளதுடன், மேலும் 220 காணிகள் கையகப்படுத்தும் பணிகள் பல்வேறு கட்டங்களில் உள்ளது. நாடளாவிய ரீதியில் உள்ள சகல நீதிபதிகளுக்கும் உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதற்கு அமைச்சுக்கு சொந்தமாக கட்டிடங்கள் இல்லாமையால் அவர்களின் சுதந்திரத்துக்கும், கௌரவத்துக்கும் ஏற்றற் போல் வாடகை இல்லங்களை வழங்குவதற்கு இவ்வருடம் 60 ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

மாற்றுப் பிணக்குத் தீர்வுப் பொறிமுறை

நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதன் மூலம் சட்ட தாமதங்கள் மீதான அழுத்தத்தைக் குறைக்க மாற்று பிணக்குத் தீர்வுப் பொறிமுறையை வலுப்படுத்த தொடர்ந்தும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இப் பணி மத்தியஸ்த சபை ஆணைக் குழு மற்றும் கடன் இணக்கச் சபை திணைக்களம் ஆகியவற்றால் மேற் கொள்ளப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் திகதி வரை மத்தியஸ்த சபையிடம் 173,085 பிணக்குகள் முன் வைக்கப்பட்டுள்ளதுடன், 94,358 பிணக்குகள் நாடளாவிய ரீதியில் தாபிக்கப்பட்டுள்ள மத்தியஸ்த சபையில் கலந்துரையாடப்பட்டுள்ளன. அங்கு 65,453 பிணக்குகள் தீர்க்கப்பட்டதுடன், பிணக்குத் தீர்க்கப்படும் சதவீதம் 69.4% ஆகும். மத்தியஸ்த சபையிடம் 2022.01.01 முதல் 2022.12.31 வரை கிடைக்கப்பெற்ற பிணக்குகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு அமையும்.

மூலாதாரங்களுக்கு அமைய பிணக்குகளின் வகைகள்	அறிக்கையிடப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை	கலந்துரையாடப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை	தீர்க்கப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை	பிணக்கு தீர்க்கப்பட்ட சதவீதம் %
நீதிமன்றங்களின் மூலம்	21,555	14,002	10,334	12.5
பொலிஸ் மூலம்	49,780	35,112	23,296	28.8
வங்கி / நிதி நிறுவனங்கள் மூலம்	87,401	35,762	25,445	50.5
சச்சரவாளர் மூலம்	12,863	8,591	5,672	7.4
பிற	1,486	891	706	0.9
மொத்தம்	173,085	94,358	65,453	

அதேபோல் 2022 ஆம் ஆண்டில் பாடசாலை மாணவர்களின் மத்தியஸ்த திறன்களை விருத்தி செய்வதற்காக 388,943 பயனாளிகளுக்கு 6,310 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

அசையும் சொத்துக்களை பிணைக்கு வைத்து கடன் பெற்றவர்களை அந்தக் கடனிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கு கடன் இணக்கச் சபையின் மூலம் நிவாரண நடவடிக்கைகள் வழங்கப்படுகின்றன. தற்போது அதன் பணிகளை பரவலாக்கி காலி, கம்பஹா, குருணாகல் போன்ற இடங்களில் கிளைகள் தாபிக்கப்பட்டுள்ளன. அதன்படி கடன் இணக்கச் சபை திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான செயற்திறன் பின்வருமாறு.

விபரம்	எண்ணிக்கை
2022.01.01 ஆம் திகதி முன் கொண்டு செல்லப்பட்ட பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை	1,424
புதிய விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை	455
மீளாய்வுக்காகவும், நிராகரிப்பு வேண்டுகோளுக்காகவும் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை	17
மொத்த விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை	1,896
சமரசம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை	417
நிராகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை	226
மீளாய்வு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை	30
சான்றிதழ் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை	03
மீளப் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை	67
பட்டியலில் இருந்து அகற்றிக் கொண்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை	22
புறம் தள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை	72
நடவடிக்கை எடுக்கப்பட்ட மொத்த விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை	837
2022.12.31 ஆம் திகதிக்கு நிறைவு செய்யப்படாமல் எஞ்சியவை	1,059

கிளைச் சபைகளுக்கு அமைய விண்ணப்பப் படிவங்களின் நிறைவு பின்வருமாறு

கிளைச் சபைகள்	கிளைகளில் நிலுவையில் உள்ள விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை	2022.12.31 ஆம் திகதிக்கு நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை	2022.12.31 எஞ்சியுள்ள வழக்குகளின் எண்ணிக்கை
தலைமை சபை	499	310	192
கொழும்புக் கிளை சபை	181	04	177
காலி கிளை சபை	266	160	106
கம்பஹா கிளை சபை	481	197	284
குருணாகல் கிளை சபை	469	166	303
மொத்தம்	1,896	837	1,059

<u>நீதிக்கான சம அணுகலை உறுதிப்படுத்தல்.</u>

இந்த அமைச்சு இலங்கையின் ஒவ்வொரு பிரஜைக்கும் நீதியைப் பெறும் பொறிமுறையை அணுகுவதற்கான வாய்ப்பை உறுதிப்படுத்தியவாறு அதிக பட்ச வாய்ப்புக்களை வழங்கும் வகையில் செயற்பட்டு வருகிறது. இலங்கையின் சட்ட உதவி ஆணைக்குழுவினால் நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ள நிலையங்களின் ஊடாக 2022 ஆம் ஆண்டினுள் 169,215 பேருக்கு சட்ட உதவி ஆணைகுழுவில் சேவைகளை வழங்கியுள்ளதுடன், அது தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

2022.01.01 ஆம் திகதிக்கு முன் கொண்டு செல்லப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	38,099
2022.01.01 முதல் 2022.12.31 வரை புதிதாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	11,380
2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு வசமிருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை	49,479
2022.01.01 முதல் 2022.12.31 ஆம் திகதிக்கு நிறைவு செய்யப்பட்ட மற்றும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	10,740
2022.12.31 ஆம் திகதிக்கு முன் கொண்டு செல்லப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	38,739
2022.01.01 ஆம் திகதி முதல் 2022.12.31 வரை பெற்றுக் கொள்ளப்பட்ட ஆலோசனைகளின் எண்ணிக்கை	119,736
2022.01.01 ஆம் திகதி முதல் 2022.12.31 வரை மேற் கொள்ளப்பட்ட முழு சேவைகள்	49,479 + 119,736 = 169,215

அதேபோல சட்ட உதவி ஆணைக்குழுவினால் சட்டம் மற்றும் அதன் நிவாரணங்கள் குறித்து மக்களை விழிப்புணர்வூட்டுவதற்கு தொடர்ந்தும் செயற்பட்டு வருவதுடன், 2022 ஆம் ஆண்டில் 51 வெகுஜன ஊடக நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. 266 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளுக்கு சட்ட உதவி ஆணைக்குழு வளவாளர் பங்களிப்பை நல்கியது. அத்துடன் நாடளாவிய ரீதியாக அமைந்துள்ள சட்ட உதவி ஆணைக்குழுவின் நிலையங்களின் ஊடாக சட்டம் தொடர்பான 78 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளதுடன், ஏனைய நிறுவனங்களின் அழைப்பின் பேரில் 137 நிகழ்ச்சிக்கு வளவாளர் பங்களிப்பை வழங்கியது.

குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை பாதுகாக்கும் தேசிய அதிகார சபைக்கு. முறைப்பாடுகளின் விபரங்கள் பின்வருமாறு.

முறைப்பாடு / கோரிக்கை	முறைப்பாடு / கோரிக்கைகளின் எண்ணிக்கை
I. உரிமம் மற்றும் உரிமை மீறல் தொடர்பாக	80
II. 8.9 பிரிவின் கீழான குற்றங்களை விசாரிப்பதற்கு	57
III. உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை	13
IV. பாதுகாப்புக்கான கோரிக்கை	109
குறித்த காலத்தினுள் கிடைத்த மொத்த முறைப்பாடுகள்	259

I. உரிமம் மற்றும் உரிமை மீறல் தொடர்பாக

2021 ஆம் ஆண்டில் முன் கொண்டு செல்லப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	99
2022 ஆம் ஆண்டினுள் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை	80
மொத்தம்	179
விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	56
மேலும் விசாரணை செய்யப்பட்டு வரும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை	123

II. 8. 9 பிரிவின் கீழான குற்ற விசாரணை

2021 ஆம் ஆண்டில் முன் கொண்டு செல்லப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	70
2022 ஆம் ஆண்டினுள் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை	57
மொத்தம்	127
விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	29
மேலும் விசாரணை செய்யப்பட்டு வரும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை	98

III. உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை

2021 ஆம் ஆண்டில் முன் கொண்டு செல்லப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	51
2022 ஆம் ஆண்டினுள் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை	13
மொத்தம்	64
விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	06
மேலும் விசாரணை செய்யப்பட்டு வரும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை	58

IV. இந் நிறுவனத்திடம் பாதுகாப்பைப் பெறுவதற்காக பாதுகாப்புப் பிரிவிடம் கிடைக்கப் பெற்ற கோரிக்கைகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

வருடம்	முறைப்பாடுகளின் எண்ணிக்கை	விசாரணை செய்யப்பட்டு வரும் மற்றும் பாதுகாப்பு வழங்கப்பட்டு வரும் முறைப்பாடுகள்	பாதுகாப்பு வழங்கப்பட்டு வரும் மற்றும் பாதுகாப்பு வழங்கிய முறைப்பாடுகள்	நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை	சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடுகள்
முன்னைய ஆண்டுகளில் முன் கொண்டு செல்லப்பட்டவை	159	14	58	86	01
2022	109	72	26	11	-
மொத்தம்	268	86	84	97	01

பாதுகாப்பை பெற்றுக்கொடுக்க வழங்கப்பட்ட ஆணைகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

வருடம்	நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் ஆணைகளின் எண்ணிக்கை	விசாரணை செய்யப்பட்டு வரும் மற்றும் பாதுகாப்பு வழங்கப்பட்டு வரும் முறைப்பாடுகள்	பாதுகாப்பு வழங்கப்பட்டு வரும் ஆணைகள்	நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை
முன்னைய ஆண்டுகளில் முன் கொண்டு செல்லப்பட்டவை	63	04	24	35
2022	12	04	06	2
மொத்தம்	75	08	30	37

<u>நீதிமன்றத்தில் சமர்பித்தல் (2022 வருடம்)</u>

செவிமடுத்தல் மூலம் பெறப்பட்ட விபரங்கள் 06 நாட்கள்

அதிகாரசபைக்கு எதிரான வழக்கு 08 நாட்கள்

குற்றவாளிக்கான கோரிக்கை தொடர்பாக 10 நாட்கள்

அதேபோல இந் நிறுவனத்தின் பணிகள் தொடர்பில் பொதுமக்கள், பொலிசு, கௌரவ நீதிபதிகள் ஆகியோரை விழிப்புணர்வூட்டுவதற்காக 2022 ஆம் ஆண்டில் பல பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

நீதி நிலைநாட்டுவதற்கு பங்களிப்புச் செய்யும் நிறுவனங்களை வலுவூட்டல்.

நீதி நிலைநாட்டும் செயற்தொடரை வினைத்திறனான முறையில் மேற் கொள்வதற்கு நீதி அமைப்பையும், அதனுடன் தொடர்புபட்ட அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களையும் வலுப்படுத்துதல் மிகவும் இன்றியமையாததாகும். அவற்றுள் சட்ட மா அதிபர் திணைக்களம் ஆற்றும் பணிகள் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. 2022 ஆம் ஆண்டில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பூர்த்தி செய்யப்பட்ட கோப்புக்களுக்குரிய தகவல்கள் பின்வருமாறு.

கிளை	வழக்கின் வகை	2021 ஆம் ஆண்டில் முன் கொண்டு வரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	2022.01.01 முதல் 2022.12.31 வரை ஒப்படைக்கப்பட்ட வழக்குக் கோப்புக்களின் எண்ணிக்கை	2022.01.01 முதல் 2022.12.31 வரை பூர்த்தி செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	2022.12.31 ஆம் திகதிக்கு எஞ்சிய வழக்குகளின் எண்ணிக்கை
* குடியியல் (சிவில்)	CE/MC		95	05	90
	CA/LT		10	01	09
	CA/MC		07	01	06
	மொத்தம்		112	07	105
	CA/DC		499	சிவில் பிரிவினால் கோப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு அரச சட்டத்தரணிகள் பிரிவிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.	
	CA/HC		432		
	CA/CA		618		
அரச சட்டத்தரணி	சிவில் வழக்கு	11,589	1,978	1,329	12,238
குற்றவியல்	குற்றவியல் வழக்கு	6,390	2,977	2,565	(6802-2) 6,800**
உயர் நீதிமன்றம்	SC FR, SC writ, SC SD SC Contempt of Court	847	531	349	1,029
கூட்டுத்தாபனங்கள்	ஆலோசனை மற்றும் ஒப்பந்த வழக்குகள்	8,134	2,532	1,300	9,366
***சிறுவர் பாதுகாப்பு	சிறுவர் துஷ்பிரயோகம்	2,235	(2,246+1251) 3,497	2,509	3,223
பொது மேன்முறையீடுகள்	குற்றவியல் / சிவில்	1,258	1,354	984	1,628
மொத்தம்		30,453	13,093	9,050	34,494

*சிவில் (குடியியல்) பிரிவினால் நிறைவு செய்யப்பட்ட வழக்குக் கோப்புக்களின் எண்ணிக்கை மட்டுமே இங்கு காட்டப்பட்டுள்ளது. CA/DC, CA/HC, CA/CA எனும் கோப்புக்கள் சிவில் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டு அரச சட்டத்தரணிகள் பிரிவின் மூலம் நிறைவு செய்யப்படும்.

**இரு கோப்புக்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதால் மொத்த எண்ணிக்கையில் இருந்து அவ்விரு கோப்புக்களும் கழித்துக் காட்டப்பட்டுள்ளன.

*** 2022.01.01 முதல் 2022.12.31 வரையான வழக்குகள்

நீதியை நிலைநாட்டும் செயற்தொடரினுள் நீதிமன்றங்களின் நிபுணத்துவம் வாய்ந்த சாட்சியாளர்களான பகுப்பாய்வாளர்கள் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற அறிக்கைகள் வழக்கு நடவடிக்கைகளை விரைவாகத் தீர்த்து வைப்பதில் பெரும் செல்வாக்குச் செலுத்துகிறது. அரச பகுப்பாய்வாளர்கள் திணைக்களத்தினால் 2022 ஆம் ஆண்டு பகுப்பாய்வு அறிக்கைகளை வெளியிட்ட முன்னேற்றம் பின்வருமாறு.

பிரிவு	2022.01.01 ஆம் திகதிக்கு எஞ்சியுள்ள வழக்குகளின் எண்ணிக்கை	2022.01.01-2022.12.31 வரை கிடைக்கப் பெற்றுள்ள வழக்குகளின் எண்ணிக்கை	2022.01.01 - 2022.12.31 வரை அறிக்கையிடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	2022.12.31 ஆம் திகதிக்கு அறிக்கை இடப்படாத வழக்குகளின் எண்ணிக்கை
போதைப் பொருட்கள் மற்றும் உளநிலை மாற்றுப் பிரிவு	1,390	20,798	16,479	5,709
துப்பாக்கி மற்றும் எறிபடை தடயவியல் பிரிவு	221	434	441	214
வெடிபொருட்கள் மற்றும் தீ புலனாய்வுப் பிரிவு	163	835	821	177
நச்சுப் பொருட்கள் தடயவியல் பிரிவு (நச்சு வகைகள்)	1,383	2,610	3,102	891
நீர்பாய தடயவியல் பிரிவு (இரத்தம் மற்றும் ஏனைய உடற் பாகங்கள்)	2,567	1,955	1,462	3,060
சந்தேகத்துக்கிடமான ஆவணங்கள் தடயவியல் பிரிவு	80	721	697	104
டிஜிட்டல் குற்றங்கள்	878	883	808	953
நானாவித தடயவியல் பிரிவு	365	458	598	225
மதுபானம்	392	7,295	7,091	596
மதுசாரம் மற்றும் புகையிலை	192	2,953	3,063	82
உணவு சட்டத்தின் கீழ் உணவு மாதிரிகள்	21	5,327	5,177	171
பல்வேறு உணவு வகைகள்	48	976	1,017	7
மொத்தம்	7,700	45,245	40,756	12,189

பயிற்சி அளிப்பதன் ஊடாக அலுவலகரின் வினைத்திறனையும், தரத்தையும் மேம்படுத்தல் நீதி நிலைநாட்டும் பொறிமுறையை வலுப்படுத்த அவசியமாகும். இலங்கை நீதிபதிகள் பயிற்சி நிறுவனத்தினால் 1,449 சட்ட அலுவலகருக்கான 27 பயிற்சித் திட்ட கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. சட்ட அலுவலகர் அல்லாத அலுவலகர்களை பயிற்றுவிக்கும் நிறுவனம் நீதிமன்றங்களில் பணி புரியும் நீதிபதிகள் தவிர்ந்த ஏனைய அலுவலகர்களுக்கு பயிற்சிகளை வழங்கியது. 2022 ஆம் ஆண்டில் 3003 பயிற்சியாளர்களுக்கு 50 நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

சிறைச்சாலைகள் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள்.

சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசலே இத்துறை எதிர்நோக்கும் மிக முக்கியமான சவாலாக அமைகிறது. சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசல்களைக் குறைப்பதற்கு சிறைச்சாலைகளை விரிவுபடுத்தல், சிறைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குதல், உத்திரவுப் பத்திரத்தின் மீது சிறைக் கைதிகளை விடுதலை செய்தல், நன்நடத்தை காரணமாக தண்டனைக் காலத்தைக் குறைத்தல், புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்புதல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் சிறைக் கைதிகளின் விடுதலை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

தொடர் இல	**தண்டனை குறைக்கப்பட்ட விதம்**	**விடுதலை செய்யப்பட்ட எண்ணிக்கை 2022.01.01 – 2022.12.31**
01	உத்திரவுப் பத்திரத்தின் மீதான விடுதலை	107
02	குடியிருப்பு விடுமுறை	275
03	நன்னடத்தை மீதான விடுதலை	288
04	விசேட தினங்களில் சிறைக் கைதிகளை விடுதலை செய்தல்	1322
	மொத்தம்	1,992

சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசலைக் குறைப்பதற்கான மாற்று தீர்வாக சமுதாயஞ்சார் சீர்திருத்த நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தினால் 2022 ஆம் ஆண்டில் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையை பெற்றுக் கொண்டமைக்கான தகவல்கள் பின்வருமாறு.

பெறப்பட்ட கட்டளைகளின் எண்ணிக்கை	பூர்த்தி செய்யப்பட்ட கட்டளைகளின் எண்ணிக்கை	மீறல்களின் எண்ணிக்கை
7,995	4,488	1,787

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தினால் பேணிச் செல்லப்படும் புனர்வாழ்வு நிலையங்களினால் 20222 ஆம் ஆண்டினுள் விடுதலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

விபரங்கள்	புனர்வாழ்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டோரின் எண்ணிக்கை	சமூக மயமாக்கப்பட்டோரின் எண்ணிக்கை
ஜனவரி	111	12
பெப்ரவரி	115	15
மார்ச்	180	44
ஏப்பிரல்	160	33
மே	215	55
ஜூன்	145	89
ஜூலை	83	80
ஆகஸ்ட்	95	333
செப்டம்பர்	141	63
ஒக்டோபர்	185	77
நவம்பர்	68	69
டிசம்பர்	67	67
மொத்தம்	1,565	937

நல்லிணக்கத்தையும், சமூக சகவாழ்வையும் நிலைநாட்டுதலும், மேம்படுத்தலும்.

ஒவ்வொரு பிரஜைக்கும் பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் அரசியல் ஸ்திரத் தன்மையின் அடிப்படையில் சம வாய்ப்புக்கள் உறுதிப்படுத்தும் வகையிலும், பன்முகத் தன்மை மற்றும் இன அடையாளங்களை மதிக்கும் வகையிலும், அனைத்து இலங்கையர்களும் ஒற்றுமையாகவும், சக வாழ்வுடனும் வாழக் கூடிய வகையில் பலமிக்க, நிரந்தரமானதும், முற்போக்கானதுமான அமைதியை போற்றும் மக்களுக்கு பின்புலத்தை தயார்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை இந்த அமைச்சு மேற் கொள்கிறது.
தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவினால் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சகவாழ்வுத் திட்டங்களுக்கான தகவல்கள் பின்வருமாறு.

2022.01.01 ஆம் திகதி முதல் 2022.12.31 வரையான செயற்திட்டங்களின் சுருக்கம்.

தொடர் இல	நிகழ்ச்சித் திட்டம்	அமுல்படுத்தப்பட்ட திட்டங்கள்	திட்டங்களின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் அளவு (ரூ)
01	விளிம்பு நிலை பாடசாலை மாணவர்களை வலுப்படுத்தல்	அனாதை அல்லது தனிப் பெற்றோரைக் கொண்ட அல்லது வறுமைக் கோட்டின் கீழுள்ள மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குதல்.	17	962 பாடசாலை மாணவர்கள்	3,657,710.00
02	குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகளுக்கு உபகரணங்களை வழங்குதல்.	புத்தக இறாக்கைகளை வழங்குதல், தொடர்பாடல் உபகரணங்களை வழங்குதல், நூலக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பாடசாலையின் பௌதீக வளங்களை மேம்படுத்தல், தொழிநுட்ப உபகரணங்களை வழங்குதல், நூல்கள் மற்றும் இறாக்கைகளை வழங்குதல் கதிரை, மேசைகளை வழங்குதல்.	03 பாடசாலைகள்	03 பாடசாலைகளின் 826 மாணவர்களுக்கு	850,000.00
மொத்தம்			20	1,788	4,507,710.00

நல்லிணகத்தை நோக்காகக் கொண்டு பொருளாதாரத்தை வலுவூட்டல், சமூக வலுவூட்டல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் போன்ற பல செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியது.

பொருளாதார வலுவூட்டல் திட்டம் (குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள்)

கால எல்லை	செயற்திட்டங்களின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கப்பட்ட மானியங்களின் அளவு (ரூ)
2022.01.01 முதல் 2022.12.31 வரை	96	113	16,916,075.77

ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் நோக்கைக் கொண்ட பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் செயற்திட்டங்களின் தகவல்கள் பின்வருமாறு.

கால எல்லை	செயற்திட்டங்களின் எண்ணிக்கை	பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கப்பட்ட மானியங்களின் அளவு (ரூ)
2022.01.01 முதல் 2022.12.31 வரை	60	100	5,256,490.00

இந்தியாவில் இருந்து மீண்டும் நாடு திரும்பிய இலங்கை அகதிகளின் ஆவணப் பிரச்சனைகளை விரைவாகத் தீர்க்கும் நோக்கில் 2022.10.31 ஆம் திகதி யாழ் மாவட்டத்திலும், 2022.11.01 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்திலும் நடத்தப்பட்ட நடமாடும் சேவைகளில் கலந்து கொண்ட சேவை பெற்றவர்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

நிறுவனம்	சேவையைப் பெற்றுக் கொண்டோரின் எண்ணிக்கை	தீர்வு வழங்கிய எண்ணிக்கை	தீர்வுக்காக பிற நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்த எண்ணிக்கை	எதிர்காலத்தில் தீர்வு வழங்க வேண்டிய தீர்க்கப்படாத பிரச்சினைகள்
வெளி விவகார அமைச்சின் தூதரகப் பிரிவு	32	31	-	1
பாதுகாப்பு அமைச்சு	1	-	-	-
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு	9	-	9	-
ஆட்பதிவுத் திணைக்களம்	39	39	-	-
பதிவாளர் நாயகத் திணைக்களம்	71	68	-	3
குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்	182	134	3	45
காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்	16	10	-	6
காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம்	123	106	-	17
இழப்பீட்டுக்கான அலுவலகம்	728	475	-	253
மொத்தம்	1,201		863	325

அமைச்சின் ஒருங்கிணைப்பு பிரிவு, தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைபாட்டுக்கான செயலகம் இணைந்து நல்லிணக்கம், சமூகம் ஒருமைப்பாடு ஏற்படுத்தி, அதை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்தல். 2022 ஆம் ஆண்டு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளும், செயற்திட்டங்களும் பின்வருமாறு.

நிகழ்ச்சித் திட்டம்	எண்ணிக்கை	செலவினம் (ரூ)
சமூக ஒருமைப்பாட்டுக்கான கல்வி	75	11,600,000.00
மோதல் நிலைமாற்ற செயற்திட்டங்கள் (நம்பிக்கை இடையான உரையாடல்)	797	24,614,827.00
நல்லிணக்கத்துக்கான கலையும், கலாச்சாரமும்	119	19,964,195.85
ஊடகம் மற்றும் தொடர்பாடல்	1,008	3,296,566.00
பொருளாதார நோக்குநிலைத் திட்டங்கள்	1,677	5,650,000.00
மொத்தம்	3,676	65,125,588.85

காணாமல் போன ஆட்கள் தொடர்பான பணியகத்தின் விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், அந்த விசாரணைகளின் தகவல்கள் பின்வருமாறு. **முறைப்பாட்டின் எண்ணிக்கையும், மேற் கொண்ட நடவடிக்கையும், ஆண்டின் முன்னேற்றமும்**

கிடைத்த மொத்த புகார்களின் எண்ணிக்கை	**மேற் கொண்ட நடவடிக்கை**
21,374	கிடைத்த மொத்த புகார்களிடையே 3,742 புகார்கள் போர் காலத்தில் இடம்பெற்றவையாகவும், 2,404 புகார்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் செய்யப்பட்டுள்ளதுடன், 240 புகார்கள் காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தின் விடயப் பரப்புக்குள் உட்படாதவை என தரவுகளை பரிசீலிக்கும் போது அடையாளம் காணப்பட்டுள்ளன. அதற்கமைய 14,988 புகார்கள் பொது மக்கள் தொடர்பான காணாமல் போனோர் தொடர்பானது என இனங்காணப்பட்டுள்ளதுடன், அப் புகார்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டு தற்போது 2647 புகார்களுக்கான விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

புகார் கிடைக்கப்பெற்ற காலம்	**புகார் தொகை**
வருடம் 1980 முன் நடைபெற்ற புகார்	**23**
வருடம் 1980 முதல் 1990 வரை நடைபெற்ற புகார்	**5,255**
வருடம் 1991 முதல் 2000 காலங்களில் நடைபெற்ற புகார்	**3,173**
வருடம் 2001 பின் நடைபெற்ற புகார்	**6,025**
காணாமற் போன திகதி குறிக்கப்படாத புகார்	**512**
பெறப்பட்ட மொத்த புகார்(பொது மக்கள் காணமற் போதல்)	**14,988**

இழப்பீட்டுக்கான அலுவலகத்தினால் வன்செயல்களின் விளைவாக, அரசியல் அமைதியின்மையும், சிவில் குழப்பங்களும் அல்லது குடும்ப உறுப்பினர்களை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை காரணமாக அழுத்தங்களுக்கு உள்ளானோருக்கு அவர்களின் வாழ்க்கையை மீள கட்டியெழுப்பவும், புனர்வாழ்வுக்கும் தேவையான உதவிகளையும், நிவாரணங்களையும் வழங்குகிறது. 2022 ஆம் ஆண்டில் இந் நிறுவனத்தின் ஊடாக வழங்கப்பட்ட நிதியுதவிகளுக்கான தகவல்கள் பின்வருமாறு காட்டப்படுகிறது.

தொடர் இல	இழப்பீட்டு முறை	எண்ணிக்கை	தொகை
1	பயங்கரவாத வன்முறைச் செயல்களால் சேதமடைந்த பொது மக்களின் சொத்துக்களுக்கு இழப்பீடு வழங்குதல்.	1994	286,978,338.00
2	பயங்கரவாத வன்முறைச் செயல்களால் சேதமடைந்த அரச அலுவலகர்களின் சொத்துக்களுக்கு இழப்பீடு வழங்குதல்.	103	19,092,000.00
3	கடுமையான பேரிடர்களால் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீட்டு முறை (பயங்கரவாத வன்முறைச் செயல்களால் சேதமடைந்த பொது மக்கள் மற்றும் அரச அலுவலகர்)	11	1,887,500.00
	கடுமையான பேரிடர்களால் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீட்டு முறை (பயங்கரவாத வன்செயல்களால் சேதமடைந்த சாதாரண அரச அலுவலகர்களும், பொது மக்களும்)	67	29,300,000.00
4	உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து நிலவிய அமைதியின்மை காரணமாக பாதிக்கப்பட்ட காயமடைந்தோருக்கான இழப்பீடு வழங்குதல்.	1	325,000.00
5	உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தொடர்ந்து நிலவிய அமைதியின்மை காரணமாக சேதமடைந்த சொத்துக்களுக்கான இழப்பீடு வழங்குதல்.	1	17,000.00
6	உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து நிலவிய அமைதியின்மை காரணமாக மரணமடைந்தோருக்கான இழப்பீடு	2	1,800,000.00
7	உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக பாதிக்கப்பட்ட காயமடைந்தோருக்கான இழப்பீடு	1	125,000.00
8	பயங்கரவாத வன்செயல்களின் காரணமாக சேதமடைந்த வழிபாட்டுத் தலங்களை புனரமைத்தல்.	96	26,170,520.00
	கண்டியில் நிகழ்ந்த அமைதியின்மையினால் ஏற்பட்ட சேதம்	6	15,531,944.00
9	காணாமல் போன ஆட்களின் குடும்பங்களுக்கான இழப்பீடு.	117	23,400,000.00
10	உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் சேதமடைந்த சொத்துக்களுக்கான இழப்பீடு	3	665,810.00
	மொத்தம்	2,402	405,293,112.00

<u>எதிர்காலத் திட்டங்கள்</u>

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தேசிய ரீதியான மூலோபாய முகாமைத்துவத்தின் நிலைபேறான அபிவிருத்தித் திட்டத்துக்கு இணங்கவும், இந்த அமைச்சுக்காவும், அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்காகவும் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தின் நோக்கை முடிந்தவரை அடையத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய காலாண்டு ரீதியாக முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் செயற் திட்டங்களை மற்றும் முன்னேற்றம் ஆங்கில பிரதியில் பக்க இல 30 தொடக்கம் 47 வரை உள்ளது.

ஒப்பந்த அமுலாக்கச் செயலணி

சிறந்த முதலீட்டு சூழலைக் கட்டியெழுப்புவதற்கு ஒப்பந்த அமுலாக்கச் செயலணியினால் ஒரு தேசிய செயற்பாட்டுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் 2023 ஆம் ஆண்டினுள் பின்வரும் இலக்குகளை எட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

- கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.
- மேலதிகமாக வர்த்தக மேல் நீதிமன்றம் ஒன்றைத் தாபித்தல்.
- கொழும்பு மற்றும் கண்டி ஆகிய இடங்களில் தனித் தனியான சிறு கோரிக்கை நீதிமன்றங்களை தாபித்தல்.
- வெளிநாட்டு முதலீட்டாளர்களின் சிக்கல்களை விரைவாகத் தீர்ப்பதற்கு முதலீட்டு நீதிமன்றத்தைத் தாபிப்பதற்குத் தேவையான சட்டங்களை மறுசீரமைத்தல்.
- வர்த்தக மேல் நீதிமன்றங்களை வினைத்திறனாக செயற்படுத்த அதன் நிதி வரம்புகளை அதிகரித்தல் உள்ளிட்ட சட்ட மறுசீரமைப்புக்களை மேற் கொள்ளுதல்.
- கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தின் டிஜிட்டல் மயப்படுத்தலை மேலும் மேம்படுத்தல்.
- குடியியல் வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தும் வகையில் மாவட்ட நீதிமன்றங்களுக்கு முன் - வழக்கு விசாரணை நடைமுறைகளை அறிமுகப்படுத்தல்.
- மாற்று சச்சரவு தீர்வுகளை வலுவூட்டத் தேவையான சட்ட மறுசீரமைப்புக்களை செய்தல்.
- வழக்கு விசாரணைகளை விரைவாகத் தீர்ப்பதற்கு மேலதிக வர்த்தக மேல் நீதிமன்றம் ஒன்றை நிறுவுதல்.

ஒப்பந்த அமுலாக்கச் செயலணியினால் அபிவிருத்தி செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் பக்க இல 31 தொடக்கம் 36 வரை உள்ளது.

வீசேட முதன்மையான நீதி புனர்நிர்மாணம்

பிரசைகளின் உரிமைகளுக்கு சிறந்த அங்கீகாரத்தையும், பாதுகாப்பையும் வழங்குவதற்காக பின்வரும் சட்ட மறுசீரமைப்புக்கள் சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் திட்டமிடப்பட்டுள்ளன.

- குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடமையை மீளப் பெறுதல் சட்டம் (2023.01.17 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது.)
- புனர்வாழ்வுப் பணியகச் சட்டம் (2023.01.24 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது.)
- தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டம் (2023.01.24 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது.)

சட்டத்தின் ஆதிக்கத்தை மேம்படுத்த நீதிக்கான சம அணுகலை உறுதி செய்வதற்கும், வழக்கு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்குமான சட்ட மறுசீரமைப்பு

- போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளித்தல் மற்றும் புனர்வாழ்வு சட்டத்துக்கான திருத்தங்கள்.
- பாலின நடுநிலைமையை அறிமுகம் செய்வதற்கு தண்டனைச் சட்டக் கோவையின் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்ட கோவையில் மேற் கொள்ளும் சட்ட மறுசீரமைப்புக்கள்
- குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளுக்கு பாதுகாப்பளித்தல் மற்றும் நிவாரணம் அளித்தல் சட்டத்தை மீளாக்கம் செய்வதற்கான சட்ட மறுசீரமைப்பு
- ஊழல் மோசடியைக் குறைப்பதற்கு வலுவான சட்டக் கட்டமைப்பை உருவாக்கும் ஊழல் மோசடிச் சட்டமூலம்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு பாகுபாட்டுத் தடைச் சட்ட மறுசீரமைப்பு

- பொது போக்குவரத்தில் நேருகின்ற பாலியல் துன்புறுத்தல்களைத் தடுக்கும் சட்ட மறுசீரமைப்பு
- பாலின நடுநிலைமையை அறிமுகப்படுத்துதல் மற்றும் குறைந்த பட்ச கட்டாய தண்டனைகளை அகற்றுதல். பெண்களுக்கு சம உரிமையை வழங்குவதற்கான தேசிய சட்ட அமைப்பு மறுசீரமைப்பு
- முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தங்கள்
- கண்டிய விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தங்கள் (ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது.)
- சிறுவர்களுக்கு எதிரான கொடூரமான சித்திரவதைகள், துஷ்பிரயோகங்கள், மற்றும் சுரண்டல்கள் போன்ற சகல வகை வன்முறைகளுக்கும் ஆளாவதை முடிவுறுத்தல்.

சிறுவர் பாதுகாப்பு மற்றும் நீதி தொடர்பான சட்ட மறுசீரமைப்பு

- சிறுவர் மற்றும் இளைஞர் (திருத்த) சட்டமூலம் (ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது.)
- சிறுவர்களுக்கு மரண தண்டனை விதிக்காமல் இருப்பதற்கான சட்ட மறுசீரமைப்புக்கள் (ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது,)

அனைத்து மட்டங்களிலும் பயனுள்ள பொறுப்புக் கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மையுடைய நிறுவனங்களைத் தாபித்தல்.

- ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் குற்றங்களினால் பெற்ற நிதி தொடர்பான நடைமுறைகளை எடுப்பதற்கான சட்ட மறுசீரமைப்பு.

நீதித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.

- தற்போதைய சூழலின் கீழ் அமைச்சரவை மற்றும் நிதி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் உத்தரவுகளுக்கு இணங்க பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ள போதிலும் பெருமளவான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள இரத்தினபுரி, வெலிமட போன்ற நீதிமன்றக் கட்டிடத் தொகுதிகள் மற்றும் சம்மாந்துறை, புத்தளம் ஆகிய நீதிமன்றக் கட்டடிங்களை நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. அத்துடன் கொழும்பில் திட்டமிடப்பட்டுள்ள நீதவான் நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் நோக்கெல்லையை திருத்தம் செய்து நிர்மாணிக்கப்பட்ட அளவின் அதிகபட்சத்தை உபயோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு

- சிறைச்சாலைகளில் மிக அத்தியாவசிய சீர்திருத்தங்களை மேற் கொள்வதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக அத்தியாவசிய இடங்களில் பாதுகாப்பு கேமரா அமைப்புக்களை நிறுவுதல்.
- சிறைச்சாலைகளின் நெரிசல்களை குறைக்கும் பொறிமுறையை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல்.

அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் வினைத்திறனையும், பயனையும் மேம்படுத்த தற்போதுள்ள செயல்முறைகளை எளிதாக்குதல்.

- எழுது பொருட்களை மீதப்படுத்திக் கொள்வதற்கு மின்னியல் தொலைத் தொடர்பு முறைமைகளின் அதிகபட்ச பாவனை
- சிறைச்சாலை முகாமைத்துவ தகவல் அமைப்பை நிறைவு செய்தல்.
- பகுப்பாய்வாளர் திணைக்களத்துக்கு பகுப்பாய்வு அறிக்கைகளின் முன்னேற்ற ஆராய்ச்சி அமைப்பை அறிமுகம் செய்தல்.

மீண்டெழும் செலவினங்களை நிருவகித்தல்.

- தற்போது வாடகை கட்டிடங்களில் தாபிக்கப்பட்டுள்ள நிறுவனங்களை அரச கட்டிடங்களுக்குக் கொண்டு வருதல்.
- கொடுப்பனவுகள், எரிபொருள், மின் சக்தி, குடிநீர் மற்றும் எழுது பொருட்கள் போன்றவற்றுக்கான செலவினங்களை குறைக்க நடவடிக்கை எடுத்தல்.

பொருளாதார ரீதியாக இக்கட்டான காலகட்டத்தை நாம் கடந்து வந்தாலும், நீதியை நிலைநாட்டும் பொறிமுறையை தடைகள் இன்றி பேணிச் செல்வதற்குத் தேவையான ஏற்பாடுகளையும், ஆதரவையும் வழங்குவதற்காக மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கும், அமைச்சரவைக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் படிப்படியாக நாடு பழைய நிலையை அடைந்து வரும் தருணத்தில் அதற்காக நீதித் துறையின் பங்களிப்பை வழங்கியமைக்காக தலைமைத்துவத்தையும், வழிகாட்டலையும் வழங்கி வரும் கௌரவ நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ அவர்களுக்கும், கௌரவ இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி அனுராத ஜயரத்ன அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். சவாலான கால கட்டத்திலும் தமது கடமையை அர்ப்பணிப்புடன் ஆற்றிய அமைச்சு மற்றும் அமைச்சுடன் தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து பணிக்குழுக்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பம்

வசந்தா பெரேரா
செயலாளர்
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

ஒப்பந்த அமுலாக்கச் செயலணியினால் அபிவிருத்தி செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம

ஒப்பந்த அமுலாக்க நிலைப்பாட்டை மேம்படுத்தும் செயற்திட்டம்.
நீதித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளுடன், வினைத்திறன் மிக்க வழக்கு முகாமைத்துவம்.

செயற்பணி	நோக்கு	மார்ச் மாதத்தின் போது கையளிக்க முடிந்தவை		ஜூலை மாதத்தின் போது கையளிக்க முடியாமை	டிசம்பர் மாதத்தின் போது கையளிக்க முடியாமை	பொறுப்புக்கள்
		இலக்கு	முன்னேற்றம்	இலக்கு	நோக்கு	
1 – வர்த்தக மேல் நீதிமன்றத்தின் மற்றும் கொழும்பு மாவட்ட மேல் நீதிமன்றத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்						
1.1 09 கொழும்பு மாவட்ட நீதிமன்றங்களை நவீனமயப்படுத்தும் பணிகள்	பணிச் சுமைக்கான குறைந்த பட்ச தர நிலைகளுடன் கூடிய அமைப்பு	09 திறந்த நீதிமன்றங்களின் நவீனமயப்படுத்தும் பணிகளை நிறைவு செய்தல்.	09 நீதிமன்றங்களின் நவீனமயப்படுத்தும் பணிகளை நிறைவு செய்தல்.	-	-	பணிப்பாளர்/ பொறியியலாளர்
1.2 04 வர்த்தக மேல் நீதிமன்றங்களை நவீனமயப்படுத்தல்.	முறையின் வினைத்திறனை மேம்படுத்தல்.	திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் பணிகளை நிறைவு செய்தல்.	நிறைவு செய்யப்பட்டுள்ளது.			
1.3 ஒரு வர்த்தக நீதிமன்றத்தை திறந்து வைத்தல்.		தற்போதுள்ள நீதிமன்றங்களில் காணப்படும் வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட வர்த்தக நீதிமன்றங்களை தாபித்தல்.	-	மேலதிக நீதிமன்றம் ஒன்றை / தாபித்து அல்லது மற்றும் 1996 ஆண்டு 10 ஆம் மேல் இலக்க நீதிமன்ற (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் பெயரிடுதல்.	உட்கட்டமைப்பு வசதிகள் நிறுவப்பட்டுள்ளது.	
1.4 வர்த்தக மேல் நீதிமன்றங்களுக்கு புதிய சாட்சி கூண்டை நிர்மாணித்தல்.		நவீன சாட்சிக் கூண்டை வடிவமைத்தல்,	வடிவமைக்கப்பட்டு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	கொள்முதல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.	02 சாட்சிக் கூண்டுகள் நிறுவப்பட்டுள்ளன.	கணக்காளர் (விநியோகம்) மற்றும் பணிப்பாளர் (பொறியியல்)

1.5.1 1.5 மில்லியனுக்கும் குறைந்த	அமைப்பின் வினைத்திறனை மேம்படுத்தல்.	இயற்றப்பட்ட சட்டங்கள்	2022 ஆண்டு 33 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கை முறைக் கோவையின் சிறு கோரிக்கை நீதிமன்றங்களை நிறுவுதல்.	சிறு உரிமை கோரல் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டுள்ள இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.	பொருத்தமான உட்கட்டமைப்பு வசதிகளும், நீதித் துறை பணியாளர்களும்	மேலதிக செயலாளர் (சட்டம்) /. மேலதிக செயலாளர் (நிர்வாகம்) / பணிப்பாளர் (பொறியியல்)
